சுருக்கம்

வேளாண்மை – உழவர் நலன் – தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் - 2023-2024-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கை - மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு - "பூச்சிகள் அருங்காட்சியகத்தை மேம்படுத்துதல்" - நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை - உழவர் நலத் (பக) துறை**

அரசாணை (நிலை) எண். 263

நாள்: 11.12.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054,
சோபகிருது வருடம்,
கார்த்திகைத் திங்கள் – 25 ஆம் நாள்
படிக்க-

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகப் பதிவாளரது கடித எண். Tamil Nadu Agricultural University / Revised Proposal Strengthening of TNAU Insect Museum / 2023, நாள் 31.10.2023.

*****

**ஆணை:**

2023-2024-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இன்னபிறவற்றுடன், கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

55) பூச்சிகள் அருங்காட்சியகத்தை மேம்படுத்துதல்

பூச்சிகளே உலகில் அதிகமாக இருக்கும் உயிரினங்கள், இன்னும் சொல்லப்போனால் பூச்சிகள் உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமக்கு, நாம் அணிந்துகொள்ள பட்டாடை தருவதும் பூச்சிகள்; மெழுகைத் தருவதும் பூச்சிகள்; முத்திரையிட அரக்கைத் தருவதும் பூச்சிகள்; மலர்களில் மகரந்த சேர்க்கை செய்து வீரிய இரகங்களை விளைவிக்க உதவுவதும் பூச்சிகள்; உண்ண தேன் தருவதும் பூச்சிகள். பூச்சிகள் இல்லாத உலகத்தை கற்பனை செய்து பார்க்க இயலாது. பட்டாம்பூச்சிகளின் சிறகசைத்தலும், தேனீக்களின் ரீங்காரமும், வண்டுகளின் ஓசையும் இல்லாத உலகம்

..2..

வெறுமையாகக் காட்சியளிக்கும். அது அலை இல்லாத கடல்; குலையில்லாத தென்னை; தலையில்லாத உடல்; இலை இல்லாத மரம்; கலை இல்லாத இடம்; சுளையில்லாத கனி, தளை இல்லாத செய்யுள்.

வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கோயம்புத்தூர் வளாகத்தில் பல்வேறு விதமான பூச்சிகள் சேகரிக்கப்பட்டு, அருங்காட்சியகம் ஒன்று அருமையாக உருவாக்கப்பட்டிருக்கிறது. பூச்சிகளைப் பற்றிய புரிதல் இருந்தால்தான் அவற்றின்மூலம் ஏற்படுகிற நோய்களையும் கட்டுப்படுத்தமுடியும். உழவர் பெருமக்கள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பொதுமக்கள் என அனைவரும் பூச்சிகளைப் பிரித்து அடையாளம் காணும் வகையில் உருவாக்கப்பட்ட இந்த அருங்காட்சியகத்தைக் கணினிமயமாக்கும் பணி கட்டாயம் அவசியம். இந்த மையத்தை மெருகேற்றவும், மேம்படுத்தவும், மேலும் கட்டமைப்புகளை உருவாக்கவும் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

2) பார்வையில் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் அவர்கள் "பூச்சிகள் அருங்காட்சியகத்தை மேம்படுத்துதல்" தொடர்பான திருந்திய கருத்துருவினை கீழ்க்கண்டவாறு அரசுக்கு சமர்ப்பித்துள்ளார்:-

1. <u>திட்டத்தின் அடிப்படை:-</u>

பருவநிலை மாற்றம், பூச்சிகளின் பன்முகத்தன்மை குறைவு மற்றும் பிற நாடுகளில் இருந்து பூச்சிகளின் படையெடுப்பு ஆகியவற்றினால் வேளாண் உற்பத்தியில் சமீபகாலமாக பூச்சிகளின் தாக்கம் அதிகரித்துள்ளது. மேலும் இரண்டாம் நிலை சேதம் உண்டாக்கும் பூச்சிகள் அதிகரித்துள்ளது. இப்பூச்சிகளையும் அதன் இயற்கை எதிரிகளையும் குறித்த நேரத்தில் சரியாக அடையாளம் கண்டறிவது இன்றியமையாதது. அடுத்து, வெவ்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகளில் பூச்சிகளின் பன்முகத்தன்மையை அடையாளம் காணவும், வகைப்படுத்தவும், ஆவணப்படுத்தவும் மற்றும் அளவிடுவதும் காலத்தின் தேவை. நன்மை செய்யும் பூச்சிகளை கண்டறிந்து அவற்றின் பெரும் உற்பத்திக்கு அடித்தளமாக பூச்சிகளின் வகைபிரித்தல் அமைகிறது.

இது தொடர்புடைய தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து பூச்சி விலங்கின வகைபிரித்தல் குறித்த ஆராய்ச்சி மிக அவசியமாகும். இதற்கு மூலக்கூறு ஆய்வு ஒரு கூடுதல் கருவியாகும். மேலும் கடைநிலை பயனாளிகளான விவசாயிகள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு வகைபிரித்து அடையாளம் காணப்பட்ட பூச்சிகள் பற்றிய தகவல்கள் சென்றடைய கணினிமயமாக்கல் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. திட்டத்தின் குறிக்கோள்கள்:-

i. வேளாண் சார்ந்த முக்கிய பூச்சிகளை பாரம்பரிய வகைபிரித்தல் மற்றும் மூலக்கூறு வகைபிரித்தல் மூலமும் அடையாளம் கண்டறிதல்.

ii. கணினி மயமாக்கல், அடையாளம் காணப்பட்ட பூச்சிகளுக்கான தரவுத்தளம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சி அருங்காட்சியகத்தின் மெய்நிகர் பயணம் உருவாக்குதல்.

3. திட்ட காலம்:- இரண்டு வருடங்கள்

4. திட்டத்தின் செயல்பாடுகள் :-

i. பல்வேறு வேளாண் சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் ஆராயப்படாத பகுதிகளிலிருந்து புதிய பூச்சிகளை சேகரித்து ஏற்கனவே உள்ள சேகரிப்பில் சேர்த்தல் மற்றும் ஆவண படுத்துதல்.

(அ). மாநிலத்தின் பல்வேறு வேளாண் சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் பிற ஆராயப்படாத பகுதிகளில் இருந்து வெவ்வேறு பேரினங்களின் கீழ் சுமார் 10,000 பூச்சிகள் சேகரிக்கப்படும். இதைத் தொடர்ந்து இவற்றின் அடையாளமும் கண்டறியப்படும். நிலையான நடைமுறையின்படி வகைப்பிரிக்கப்பட்டு பதப்படுத்தப்பட்டு, பெயரிடப்பட்டு தோராயமாக 400 பூச்சி சேமிப்பு பெட்டிகளில் பாதுகாக்கப்படும். இதற்கு பூச்சி சேகரிப்பு நிபுணர்கள், ஒப்பந்த பணியாளர்கள், துணை பணியாளர்கள், தினக்கூலி பணியாளர் மற்றும் ஒத்துழைப்பு பணியாளர்களின் சேவை பயன்படுத்தப்படும். பூச்சி சேகரிப்புக்கான வலைகள், விளக்குப்பொறிகள், பதப்படுத்துவதற்கு தேவையான இரசாயனங்கள் மற்றும் பாதுகாப்புக்கு தேவையான இரசாயனங்கள் பயன்படுத்தப்படும்.

..4..

(ஆ). சேகரிக்கப்பட்ட பூச்சிகள் புகைப்படம் எடுக்கப்படும்.

ii. பூச்சிகளின் அடையாளத்தை வழக்கமான வகைபிரித்தல் முறையிலும் மூலக்கூறு ஆய்வு முறையிலும் கண்டறிதல்

சேகரிக்கப்பட்ட பூச்சிகளின் வெவ்வேறு பருவநிலைகளை புகைப்படம் எடுப்பதுடன் அவற்றை அதற்கான உணவு தாவரத்தில் வளர்க்கப்படும். இப்பூச்சிகளை கனஉருப்பெருக்க நுண்ணோக்கிகள் (தோராயமாக 10 எண்கள்) மூலம் அடையாளம் கண்டறியப்படும். மேலும், நுண்ணிய பூச்சிகளின் அடையாளத்தை பட பகுப்பாய்வி மற்றும் வரைதல் குழாய் உடன் கட்ட மாறுபாடு நுண்ணோக்கியின் கீழ் வைத்து அவற்றின் அடையாளம் கண்டறியப்படும். வழக்கமான முறையில் கண்டறியப்பட்ட பூச்சிகள் மூலக்கூறு ஆய்வின் மூலம் வகைப்பிரிக்கப்படும். பழங்கால பூச்சி சேகரிப்புகளை சேதமில்லாத புகைப்படத் தகட்டில் பிம்பத்தைக் காட்சிப்படுத்தும் முறைகள் மூலம் இனங்கள் அடையாளம் கண்டறிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும். வழக்கமான முறையில் அடையாளம் காணுதல் மற்றும் மூலக்கூறு ஆய்வு ஆகியவற்றிற்கு இரசாயனங்கள் மற்றும் பிற ஆய்வகப் பொருட்கள் பயன்படுத்தப்படும். மேற்கூறிய ஆய்விற்கு வகைப்பாட்டியல் நிபுணர்கள், மூலக்கூறு உயிரியலாளர்களின் சேவை பயன்படுத்தப்படும்.

iii. பூச்சி அருங்காட்சியகத்தின் உள் மற்றும் அருகாமையில் பூச்சிகளைப் பற்றிய கண்காட்சிகளின் விரிவாக்கம்

(அ). புதிதாக சேகரிக்கப்பட்ட பூச்சிகள் அருங்காட்சியகத்தின் பொருத்தமான பிரிவுகளின் கீழ் சுமார் 350 பூச்சி காட்சி பெட்டிகளில் காட்சிப்படுத்தப்படும். பூச்சிகளையும், அருங்காட்சியகத்தையும் பிரபலப்-படுத்துவதற்காக புதிய பூச்சி பொம்மைகளை அருங்காட்சியகத்திற்குள்ளும் அருகாமையிலும் வைக்கப்படும். நவீன முறைகளான பூச்சி முப்பரிமான படிமம் மற்றும் ஒளிகதிர் அமைப்பு தயாரித்தல். தற்போதுள்ள காட்சியில் புதிய காட்சிப் பொருட்கள், புதிய விளக்கப்படங்கள் சேர்க்கப்படும்.

(ஆ). அருங்காட்சியகத்தில் உள்ள பூச்சிகள் மற்றும் காட்சிப் பொருட்களின் விவரங்கள் பற்றி சுய விளக்க அமைப்புடன் வழிகாட்டப்பட்ட சுற்றுப்பயணம் மேற்கொள்ள அருகலை காதொலிப்பான் மற்றும் கேட்பொலி வழிகாட்டி பயன்படுத்தப்படும்.

iv. **தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சி அருங்காட்சியகம் கணினிமயமாக்கல்**

(அ). வேளாண் முக்கிய பூச்சிகளின் புகைப்படங்கள் மற்றும் பழங்கால பூச்சிகளின் புகைப்படங்கள் கணினி மயமாக்கப்படும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பூச்சி அருங்காட்சியகத்திற்கான பிரத்யேக இணையதளம் உருவாக்கி அதில் இவை அனைத்தும் காட்சியிடப்படும்.

(ஆ). உலகளவில் அனைவரும் இப்பூச்சி அருங்காட்சியகத்தை காண மெய்நிகர் சுற்றுப்பயணம் உருவாக்கப்படும்.

**5. பயனாளிகள்:-**

பள்ளி, கல்லூரி மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், உழவர் பெருமக்கள் மற்றும் பொது மக்கள்.

**6. நிதி ஒதுக்கீடு:-** ரூபாய் 3.00 கோடி

**7. திட்டத்தின் பயன்கள்:-**

- புதிய பூச்சி சேகரிப்புகள் மற்றும் புதுமையான பூச்சி தொடர்பான காட்சி பொருட்கள் பூச்சிகள் மீதான ஆர்வத்தையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் அதிகரிக்கும்.
- கணினி மயமாக்கல் அனைத்து பங்குதாரர்களும் பூச்சிகளை சரியாக அடையாளம் கண்டு அதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க உதவும்.
- பூச்சி வகைபிரித்தல் மற்றும் கணினி மயமாக்குவதால் தரவுத்தளங்கள், பிற வடிவங்களுடன் பூச்சிகளை எளிதில் சரியான அடையாளம் காண உதவும்.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சி அருங்காட்சியகத்தின் மெய்நிகர் சுற்றுப்பயணம் உலக அளவில் அருங்காட்சியகத்தின் பார்வையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.
- ஒரு சாதாரண மனிதனுக்கும் இயற்கையை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை உணர வைத்தல்;

3) மேலே பத்தி 2-இல் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பதிவாளரது கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, “பூச்சிகள் அருங்காட்சியகத்தை மேம்படுத்துதல்” குறித்த அறிவிப்பினை

செயல்படுத்த பின்வருமாறு நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது:-

(i) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பூச்சிகள் அருங்காட்சியகத்தை மேம்படுத்த ரூ.2,69,47,000/-க்கு (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்து ஒன்பது இலட்சத்து நாற்பத்தி ஏழாயிரம் மட்டும்) நிர்வாக ஒப்புதலும் மற்றும் நிதி ஒப்பளிப்பும் கீழ்க்கண்டவாறு செய்யப்படுகிறது:-

(தொகை ரூபாயில்)

| வ. எண் | விவரங்கள் | தோராயமாக நிகர தொகை | சரக்கு மற்றும் சேவைவரி (18%) தொகை | முதலாம் ஆண்டு தொகை | இரண்டாம் ஆண்டு தொகை | மூன்றாம் ஆண்டு தொகை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | **தொடரா செலவினம்** | | | | | |
| அ. | **பல்வேறு வேளாண் சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் ஆராயப்படாத பகுதிகளிலிருந்து புதிய பூச்சிகளை சேகரித்து ஏற்கனவே உள்ள சேகரிப்பில் சேர்த்தல் மற்றும் ஆவண படுத்துதல்** | | | | | |
| i. | சுமார் 10,000 புதிதாக சேகரிக்கப்படும் பூச்சிகளுக்கான பூச்சி சேமிப்பு மற்றும் காட்சி பெட்டிகள் (தோராயமாக 400 எண்கள்) | 8,47,458 | 1,52,542 | 10,00,000 | - | - |
| ii. | வேளாண் முக்கிய பூச்சிகளின் புகைப்பட ஆவணங்களுக்கான புகைப்பட கருவி மற்றும் பாகங்கள் (1 எண்) | 1,69,492 | 30,508 | 2,00,000 | - | - |
| ஆ. | **பூச்சிகளின் அடையாளத்தை வழக்கமான வகைபிரித்தல் முறையிலும் மூலக்கூறு ஆய்வு முறையிலும் கண்டறிதல்** | | | | | |
| i. | வழக்கமான முறையில் பூச்சிகளின் அடையாளம் கண்டறியக்கூடிய கன உருப்பெருக்க நுண்ணோக்கிகள் (லைக்கா) (தோராயமாக 7 எண்கள்) | 8,47,458 | 1,52,542 | 10,00,000 | - | - |
| ii. | நுண்ணிய பூச்சிகளை அடையாளம் கண்டறியக்கூடிய பட பகுப்பாய்வி மற்றும் வரைதல் குழாய் (லைக்கா) உடன் கட்ட மாறுபாடு நுண்ணோக்கி (1 எண்) | 5,93,220 | 1,06,780 | 7,00,000 | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| iii. | பூச்சிகளை மூலக்கூறு முறையில் அடையாளம் கண்டறியவும் அதன் பரிணாமம் பற்றிய ஆய்விற்காகவும் பூச்சி மூலக்கூறு வகை பிரித்தல் ஆய்வகத்தை நிறுவுதல் | | | | | |
| 1. | ஆழ்ந்த உறைவிப்பான் (-20°C) (1 எண்) | 2,11,864 | 38,136 | 2,50,000 | - | - |
| 2. | குளிரூட்டப்பட்ட மையவிலக்கு (1 எண்) | 3,81,356 | 68,644 | 4,50,000 | - | - |
| 3. | குளிர்சாதன பெட்டி (2 எண்கள்) | 2,11,864 | 38,136 | 2,50,000 | - | - |
| 4. | தடையற்றமின்சார சாதனம் (1 எண்) | 1,69,492 | 30,508 | 2,00,000 | - | - |
| 5. | சுழல் கருவி (1 எண்) | 55,085 | 9,915 | 65,000 | - | - |
| 6. | மூலக்கூற்று உயிரியலில் பாலிமரேசு தொடர்வினை கருவி (1 எண்) | 5,08,475 | 91,525 | 6,00,000 | - | - |
| 7. | கணினியுடன் கூடிய ஜெல் ஆவண அலகு (1 எண்) | 4,66,102 | 83,898 | 5,50,000 | - | - |
| 8. | மின்சாரம் வழங்கும் அலகுடன் கூடிய ஜெல் எலக்ட்ரோ போரேசிஸ் அமைப்பு (1 எண்) | 1,27,119 | 22,881 | 1,50,000 | - | - |
| 9. | பனிக்கட்டி தயாரிப்பு கருவி (1 எண்) | 3,72,881 | 67,119 | 4,40,000 | - | - |
| 10. | ஆய்வக தளவாடங்கள் | | | | | |
| | ஆய்வக மேசை (1 எண்) | 1,29,661 | 23,339 | 1,53,000 | - | - |
| | ஆய்வக நாற்காலி (6 எண்கள்) | 14,407 | 2,593 | 17,000 | - | - |
| | கண்ணாடி கதவுகள் கொண்ட எஃகு அலமாரி (3 எண்கள்) | 71,186 | 12,814 | 84,000 | - | - |

..8..

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 11. | லேமினார் காற்று ஓட்ட அறை (1 எண்) | 1,05,932 | 19,068 | 1,25,000 | - | - |
| 12. | ஆய்வக குலுக்கி (1 எண்) | 3,81,356 | 68,644 | 4,50,000 | - | - |
| 13. | ஆய்வகம் உலர் குளியல் (1 எண்) | 22,034 | 3,966 | 26,000 | | - |
| 14. | குளிரூட்டி (2 டன் : 2 எண்கள்) | 1,61,017 | 28,983 | 1,90,000 | - | - |
| iv. | சிறிய பூச்சி மாதிரிகள் செய்வதற்கு முப்பரிமான அச்சுப்பொறி சாதனம் மற்றும் துணைக்கருவிகள் (2 எண்கள்). | 4,23,729 | 76,271 | 5,00,000 | - | - |
| இ. | **பூச்சி அருங்காட்சியகத்தின் உள் மற்றும் அருகாமையில் பூச்சிகளைப் பற்றிய கண்காட்சிகளின் விரிவாக்கம்** | | | | | |
| i. | பூச்சிகளை பிரபலப்படுத்தும் வெவ்வேறு பூச்சி இனங்களின் மாதிரி பொம்மைகள் (தோராயமாக 8 எண்கள்) | 4,23,729 | 76,271 | 5,00,000 | - | - |
| ii. | நவீன காட்சியக முறைகளான பூச்சி முப்பரிமான படிமம். | 4,23,729 | 76,271 | 5,00,000 | - | - |
| iii. | பார்வையாளர்களுக்கு பல்வேறு மொழிகளில் தானியங்கி சுய விளக்க அமைப்புடன் கூடிய வழிகாட்டப்பட்ட சுற்றுப்பயணம் (அருகலை காதொலிப்பான் மற்றும் கேட்பொலி வழிகாட்டி) | 8,47,458 | 1,52,542 | 10,00,000 | - | - |
| ஈ. | **பூச்சி அருங்காட்சியகத்தின் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்** | | | | | |
| i. | பூச்சி அருங்காட்சியகத்தில் தட்பவெப்ப மாறுதலில் உண்டாகும் சிதைவுகளிலிருந்து காப்பு | 12,71,186 | 2,28,814 | 15,00,000 | - | - |

..9..

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ii. | பழைமையான பூச்சிகளின் காப்பகத்திற்கு தீ தடுப்பு அமைத்தல் | | | | | |
| 1. | தீ எச்சரிக்கை அமைப்பு (2 எண்கள்) | 3,81,356 | 68,644 | 4,50,000 | - | - |
| 2. | வாயு அடிப்படையிலான தீயை அடக்கும் அமைப்பு பழமையான பூச்சிகளின் காப்பகத்தின் பரிமாணம் | 16,94,915 | 3,05,085 | 20,00,000 | - | - |
| 3. | பூச்சி பெட்டிகளை பாதுகாக்க தீ பாதுகாப்பு தன்மை கொண்ட திரை அமைத்தல் | 4,66,102 | 83,898 | 5,50,000 | - | - |
| உ. | **தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சி அருங்காட்சியகம் கணினிமயமாக்கல்** | | | | | |
| i. | **உலகளவில் வேளாண் பூச்சிகளை பற்றி அறிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சி அருங்காட்சியக இணையதள உருவாக்கம், சேவையக இடக் கணிப்பொறி மற்றும் அதன் பராமரிப்பு** | 84,746 | 15,254 | 1,00,000 | - | - |
| ii. | **வேளாண் முக்கிய பூச்சிகளின் புகைப்படங்களுடன் கூடிய தகவல்கள் கொண்ட தரவுத்தள சேமிப்பு அமைப்பு (1 எண்)** | 16,94,915 | 3,05,085 | 20,00,000 | - | - |
| iii. | யாவரும் எங்கிருந்தும் காண தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சி அருங்காட்சியகத்தின் மெய்நிகர் பயணம் | 25,42,373 | 4,57,627 | 30,00,000 | - | - |
| | **கூட்டுத்தொகை (1)** | 1,61,01,697 | 28,98,303 | 1,90,00,000 | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. | பணியாளர்களின் செலவினம் (இருபது மாதங்களுக்கு மட்டும்) | | | | | |
| i. | முதுநிலை ஆராய்ச்சியாளர்கள் (3 எண்கள் @ ரூ.31,000/ மாதம்) மாநிலம் முழுவதும் உள்ள பூச்சிகளின் வழக்கமான மூலக்கூறு வகைபிரித்தல் மூலம் அடையாளம் காணுதல் (3 x 31000 x 20) | 18,60,000 | | | | |
| ii. | இளநிலை ஆராய்ச்சியாளர்கள் (1 எண் @ ரூ. 20,000/ மாதம்) பூச்சி சேகரிப்பு, வகை பிரித்தல், பாதுகாத்தல் மற்றும் பூச்சிகளை குடும்ப வாரியாக பிரித்தல் (1 x 20000 x 20) | 4,00,000 | | | | |
| iii. | தொழில்நுட்ப உதவியாளர் (1 எண் @ ரூ.18,000/ மாதம்) பூச்சிசேகரிப்பு, ---- பாதுகாத்தல் மற்றும் அருங்காட்சியக பராமரிப்பு (1 x 18000 x 20) | 3,60,000 | | | | |
| iv. | ஒப்பந்ததிறன் பணியாளர்கள் (2 எண்கள் வருங்கால வைப்பு நிதியுடன் கூடிய மாத ஊதியம் ரூ. 14,000 /-) (2 x 14000 x 20) | 5,60,000 | | | | |
| | **கூட்டுத்தொகை (2)** | 31,80,000 | | | | |
| 3. | **தொடரும் செலவினம்** | | | | | |
| a. | பூச்சிகளை காட்சிபடுத்த தேவையான பொருட்கள், பூச்சி சேகரிப்பு பொருட்கள், பூச்சி பராமரிப்பு இரசாயனங்கள், மூலக்கூறு ஆய்விற்கான இரசாயனங்கள் மற்றும் இதர நுகர்பொருட்கள் | - | - | 8,00,000 | 8,00,000 | 8,00,000 |

..11..

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| b. | பூச்சி சேகரிப்பு பயணம், விளக்கப்படம் வடிவமைத்தல், பூச்சி அருங்காட்சியகத்தின் காட்சிகள் மற்றும் பராமரிப்பு மற்றும் பிற தற்செயலான கட்டணங்கள் போன்றவை. | - | - | 7,67,000 | 8,00,000 | 8,00,000 |
| | **கூட்டுத்தொகை (3)** | - | - | 15,67,000 | 16,00,000 | 16,00,000 |
| | **மொத்தம் (1,2,3)** | 31,80,000 | | 2,05,67,000 | 16,00,000 | 16,00,000 |
| | **மொத்த தொகை** | 2,69,47,000/- | | | | |

(ii) மேலே பத்தி 3(i)-ல் உள்ள இனம் எண்.1(இ) (iii) - "பார்வையாளர்களுக்கு பல்வேறு மொழிகளில் தானியங்கி சுய விளக்க அமைப்புடன் கூடிய வழிகாட்டப்பட்ட சுற்றுப்பயணம் (அருகலை காதொலிப்பான் மற்றும் கேட்பொலி வழிகாட்டி)" மற்றும் இனம் எண்.1(உ) - "தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சி அருங்காட்சியகத்தை கணினிமயமாக்கல்" ஆகிய இனங்கள் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் செயல்படுத்தப்படவேண்டும்; மற்றும்

(iii) மேலே பத்தி 3(i)-ல் உள்ள இனம் எண்.2 - "பணியாளர்களின் செலவினம்"-ல் குறிப்பிட்டுள்ளவாறு 7 (ஏழு) பணியாளர்களுக்கு 20 மாதத்திற்கு மட்டுமே அனுமதியும், 20 மாதத்திற்கு பிறகு அவர்களை பணியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்;

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2415. வேளாண்மை ஆராய்ச்சியும் மற்றும் கல்வியும் -01. பயிர் வளர்ப்பு-120-ஏனைய நிறுவனங்களுக்கு நிதி உதவி – மாநிலச் செலவினங்கள் – AB. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கு உதவித் தொகை-309. உதவித் தொகை - 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.

(IFHRMS த.தொ.கு. 2415 01 120 AB 309 03)

5 மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கிட வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.308/ADS(GKT)/2023, நாள் 27.11.2023-இல் வழங்கிய ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் 641 003.
வேளாண்மை ஆணையர், சென்னை-600 005.
வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர்-641 003.
முதன்மை மாநில கணக்காயர் (G&SSA/ E&RSA), சென்னை-600 018
மாவட்ட கருவூல அலுவலர், கோயம்புத்தூர்-641 018.
துணை இயக்குநர், உள் தணிக்கை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்- 641 003.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை-600 009.

நகல்:-
மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், வேளாண்மை – உழவர் நலத்துறை, சென்னை-600 009.
நிதித் (வேளாண்மை – உ.ந.) துறை, சென்னை-600 009.
வேளாண்மை – உழவர் நலத் (அ.ந.மு.3 / வ (ம) தி) துறை,
சென்னை-600 009.
கோ.எண்.1387/பக/2023.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஆர். சேந்தில்குமார் 11/12/2023
பிரிவு அலுவலர்.